US 2
SD-4

**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிரெய்ல் கைக்கடிகாரங்கள் பெற்று, தற்போது அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின் அதற்காக விண்ணப்பிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு மீண்டும் பிரெய்ல் கைக்கடிகாரங்கள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண். 10** **நாள்: 01.08.2024,**

**குரோதி, ஆடி–16,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2055.**

**படிக்க :**

1. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த்துறை, நாள் 04.05.2018.
2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண்.2427/உ.உ.பிரிவு/2024, நாள்.25.06.2024.

******

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2018–2019 ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுள் சுமார் 52 நலத்திட்டங்களை வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப்பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2 (i) (6)–ல் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தில் பிரெய்ல் கைக்கடிகாரங்கள் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 21.06.2024 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> "பார்வை மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரெய்ல் கைக்கடிகாரங்கள் பெற்று, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிரெய்ல் கைக்கடிகாரங்களின் எண்ணிக்கையில், 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கையில் பழுதடைந்த பிரெய்ல் கைக்கடிகாரங்களுக்குப் பதிலாக, புதிய பிரெய்ல் கைக்கடிகாரங்கள் வழங்கப்படும்"

3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், தனது கடிதத்தில், ஒவ்வொரு ஆண்டும் பார்வைத்திறன் மாணவர்கள், பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்ல் கைக்கடிகாரங்கள்

வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேற்காணும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற பிரெய்ல் கைக்கடிகாரங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் புதிதாக வழங்க ஏதுவாக, ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிரெய்ல் கைக்கடிகாரங்களின் எண்ணிக்கையில், 25 சதவீதம் பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்ல் கைக்கடிகாரங்கள் வழங்க அனுமதித்து அரசாணை வழங்குமாறும், மேலும், இவ்வுபகரணங்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள் கொள்முதல் செய்யப்படுவதால், கூடுதல் நிதி ஏதும் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று, பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பிரெய்ல் கைக்கடிகாரங்கள் பெற்று, தற்போது அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அத்தகைய பயனாளிகள் புதிய பிரெய்ல் கைக்கடிகாரங்கள் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் பிரெய்ல் கைக்கடிகாரங்களின் மொத்த எண்ணிக்கையில், 25 சதவீத அளவிலான ஒதுக்கீட்டுக்குள் பழுதடைந்த பிரெய்ல் கைக்கடிகாரங்களுக்குப் பதிலாக, புதிய பிரெய்ல் கைக்கடிகாரங்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள்ளாக வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் sவழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-35.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதி (ச.ந/வ.செ.பொது-I&II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
செயலாளரின் தனிச் செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

**பிரிவு அலுவலர்**